நகராட்சி நிர்வாக இயக்குநர்
17 AUG 2009
சேப்பாக்கம், சென்னை-5

m3

039015

கருக்கம்

நகராட்சி/ மாநகராட்சி பள்ளி கல்வி உதவித் திட்டம் – வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது – கல்விக் கட்டணம் என்ற தலைப்பின் கீழ் புத்தகக் கட்டணத்தையும் சேர்த்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அ.ஆ.(நிலை) எண்:146 நாள்:14.08.2009

படிக்கப்பட்டது: –

1) அ.ஆ.(நிலை) எண். 234 ந.நி.(ம) கு.வ துறை நாள் 27.11.2008
2) ந.நி.இயக்குநரின் கடிதம் ந.க.எண். 2493/ 2008/எம் 3 நாள் 14.7.2009

---

ஆணை: –

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டுள்ள நகராட்சி/ மாநகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவித் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் கல்விக்கட்டணம் என்ற தலைப்பின்கீழ், கீழ்க்கண்ட கல்வி கட்டணங்களை வழங்குவதற்கும், மற்றும் விடுதிக் கட்டணம், உணவுக் கட்டணம் ஆகியவற்றை வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| i) | சேர்க்கை / பதிவுக் கட்டணம் |
| ii) | கல்வி கற்பிப்புக் கட்டணம் |
| iii) | பரிசோதனைக் கூடக் கட்டணம் |
| iv) | விளையாட்டுக் கட்டணம் |
| v) | மாணவர் சங்கக் கட்டணம் |
| vi) | நூலகக் கட்டணம் |
| vii) | மருத்துவ பரிசோதனைக் கட்டணம் |

2) உயர்கல்விச் செலவுகளில், புத்தகங்களுக்கான செலவு மிகமுக்கியமான ஒன்றாகும் என்பதால், இதுகுறித்து நகராட்சி/ மாநகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவித் திட்டத்தை செயல்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள் குழுக்கூட்டம், 4.7.09 அன்று நடைபெற்றதாகவும், அக்கூட்டத்தில், மாணவர்கள் நலனைக்கருத்தில் கொண்டு, இனிவரும் காலங்களில் மாணவர்கள் பாடப்புத்தகங்களை அவ்வப்போது வாங்கிக் கொள்ள ஏதுவாக அவர்கள் சமர்ப்பிக்கும் புத்தக ரசீதுகளின் அடிப்படையில் தொழில் சார்ந்த உயர்கல்வி பயில்வோருக்கு ஆண்டிற்கு அதிகபட்சமாக ரூ.4,000/–மும், கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பயில்வோருக்கு ஆண்டிற்கு அதிக பட்சமாக ரூ.2,000/–மும் புத்தக உதவித் தொகையாக வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டது என்றும்,

எனவே, 4.7.09 நாளைய குழுக்கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, நகராட்சி / மாநகராட்சி பள்ளி மாணவர் கல்வித்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் உரிய திருத்தங்கள் வெளியிடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்று, 4.7.09 நாளைய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டுள்ள நகராட்சி/ மாநகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவித் திட்ட வழிகாட்டிநெறிமுறைகளில் கல்விக் கட்டணம் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள இனங்களுடன், இனம் viii-ஆக புத்தக கட்டணத்தையும், (தொழில் சார்ந்த உயர்கல்வி பயில்வோருக்கு ஆண்டிற்கு அதிகபட்சமாக ரூ.4000/-, கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பயில்வோருக்கு ஆண்டிற்கு அதிக பட்சமாக ரூ.2,000/-) சேர்த்து அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5
உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ, சென்னை-35.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
அனைத்து மாநகராட்சி/நகராட்சி ஆணையர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநிலக் கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9. மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை- 9.

நிதித் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர். 14/8/09